COMPLIMENTARY

Registered as a News Paper in Sri Lanka

# குன்றின் குரல்

மலர் 7 | மார்ச் 1987 — விலை ரூ. 1—00 | இதழ் 3

# மலையக தொழிற் சங்க முதல்வர் அமரர் திரு. கோ. நடேச ஐயர்

— அந்தனி ஜீவா —

மலையக தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு வருகை தந்து ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு மேலாகி விட்டன. தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் மோசமாக, அடிமைகளை விட கேவலமாக நடத்தப்பட்டனர். ஆனால் இவர்கள் இலங்கை வந்து நூறாண்டுகள் சென்ற பின்னரே, அதாவது 1932-ம் ஆண்டில்தான் தோட்டங்களில் முதன்முதலாக தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

சுதந்திரம் வழங்கப்பட்ட கூலித்தொழிலாளர்களாகத் தோட்டத் தொழிலாளர்கள் விளங்காமையால் தான் தோட்டங்களில் தொழிலாளர்கள் அமைப்புகள் உருவாகவில்லை,

அந்த காலக்கட்டங்களில்

★ சம்பளத்தின் ஒரு பகுதி மாத்திரமே வழங்கப்பட்டது எஞ்சிய பகுதி அரிசி, மாவு போன்ற பொருளாக வழங்கப்பட்டது.

★ கடன் கொடுப்பதன் மூலமாக தொழிலாளர்கள் கங்காணியுடன் பிணைக்கப்பட்டிருந்தனர்.

★ தோட்டத் தொழிலாளர்கள் தமது விருப்பத்திற்கமைய தோட்டத்தை விட்டு விலக முடியாது, அவ்வாறு விலக நினைத்தால் அவரைச் சிறையில் அடைக்கவும் சட்டம் இடம் அளித்தது.

★ தொழிலாளர்கள் தங்களுக்குத்தேவையான பொருட்களை கங்காணியோ, தோட்ட நிர்வாகமோ வைத்து நடத்தும் கடைகளில் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும்.

★ தோட்டத்தொழிலாளர்களை கட்டி வைத்து அடித்தல், கடுமையான தண்டனை வழங்குதல் போன்ற கட்டுப்பாடுகள் மிகவும் கொடூரமாக இருந்தன. காவல் நாய்கள், காவற்காரர்கள் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேற முடியாதவாறு கண்காணித்தனர்.

பெரிய கங்காணிமார்களின் கொடுமைக்கு பயந்து தோட்டத்தை விட்டு ஓடிப் போனாலும் கூட அவர்களை தேடிப் பிடித்து பகிரங்கமாக மரத்தில் கட்டி வைத்து கசையடி கொடுக்கும் காலம்.

மனைவியை தோட்டத்தில் நிறுத்திக் கொண்டு, கணவனை பத்துச்சிட்டு கொடுத்து தோட்டத்தை விட்டு வெளியே போட்ட பயங்கரமான காலகட்டம்.


மிருகத்தை விட கேவலமாக தோட்டத் தொழிலாளர்கள் நடத்தப்பட்ட காலம் அது!

இத்தகைய கொடுமைகளை எல்லாம் கண்டு குமுறி எழுந்தார் கோ, நடேச ஐயர் அவர்கள், இதற்கு எதிராக போராட கங்கணம் கட்டினார்,

(7ம் பக்கம் பார்க்கவும்)

"இனி ஒரு விதி செய்வோம் — அதை எந்நாளும் காப்போம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார்வதி

— மலரன்பன் —

சர்வதேச மாதர் தினத்தை முன்னிட்டு 'மலரன்பன்' எழுதுனில் எழுதிய 'பார்வதி' என்ற சிறுகதை மறுபிரசுரஞ் செய்கின்றோம். மலையகப்பெண்களின் அவலவாழ்க்கையை சித்தரிக்கும் கதை இது. விரைவில் வெளிவரவிருக்கும் மலரன்பனின் சிறு கதைகளைக் கொண்ட தொகுதியான 'ஞானரதம்' தொகுதியில் இக் கதை இடம்பெறுகிறது.

இப்படியாகத் தானே...... அந்த பத்துத்தலை இராவணனாகப்பட்டவன்...இராமபிரானின் மனைவியாகிய சீதாப்பிராட்டியை... பர்ணசாலையோடு [illegible]யர்த்து எடுத்துக்[illegible]ண்டு வான வீதியிலே புட்[illegible]னத்தில் பறந்து கொண்டிருந்தான்...

மே[illegible]து அண்ணாவிக் கங்காணி பெரிய எழுத்[illegible] இ[illegible]யணத்தை எழுத்துக் கூட்டி சுருதி சேர்த்துப் படிக்கும் ஒலி பணிய லயத்துப் பார்வதியின் காதுகளில் விழுகிறது.

சேச்சே என்ன புராணம். விடிய விடிய; மனுசனாகப் பட்டவன் திண்ணு உண்ணு அசந்து மசந்து தூங்காமல் சும்மா காதடைக்க கத்துரு[illegible]க?' சலிப்புடன் சன்னலை சாத்துகிறுள் பார்வதி.

''என்ன தொங்க வீடு, இப்பத்தான் சன்னல் சாத்ருப்ல இருக்கு. இன்னும் தூங்கலியா'' கேட்டது அடுத்த வீடு.

''ஒப்புறுன தூக்கமா வருது இந்த மேட்டு லயத்து ஆளுங்களால புராணம் படிக்கிறேன் படிக்கிறேன்னு ஒரேதா விடிய விடிய ''ஸ்டோர் மோல்'' கணக்கா கத்துறுங்க...''

''ஒங்க வூட்டுக்காரரு எப்ப வருவாரு? போன சங்கதி ஒன்னும் தெரியலியே''.

''யாரு ராமுவுங்க அப்பனு? எப்போ வருதோ தெரியல, அவுங்க ஆயிக்கி ஆச்சா போச்சான்னு இருக்கின்னு தந்தி வந்தன்னக்கி போனிச்சிஇன்னக்கு நாலு நாளாச்சி. என்னமோ ஏதோ தெரியல''— அடுத்த வீட்டுக்காரியின் கேள்விக்கு பதில் சொல்கிறுள் பார்வதி. அவள் ''ராமுவுங்க அப்பன்'' என்று சொன்னது தன் கணவனைத்தான்.

''சரி சரி எனக்கும் கண்ண கசக்கிது நான் படுக்கிறேன். அடுத்த வீட்டில் ஒளி அவிகின்றது.

'.. சீதாப் பிராட்டியை தேடிக்கொண்டு வந்த இராமலக்குமணர்கள் சுக்ரீவனை சந்திக்கின்றனர்...' அண்ணாவிக் கங்காணியின் பெரிய எழுத்து இராமாயணம் கணீரென ஒலிக்கின்றது.

கதவை மெதுவாகத் திறந்து மெள்ள வெளியே வந்து பார்க்கின்றுள், பணிய லயத்துக்கு எதிரே மேல் முடக்கில் இருக்கும். கண்டக்கையாவின் பங்களாவில் விளக்கு எரிவது தெரிகின்றது. உள்ளே வந்தவள் கதவை மெதுவாக ஒருக்கணித்து வைத்துவிட்டு படுக்கையில் விழுகின்றுள். படுத்தப்படி தன் உடலையே ஒரு முறை பார்த்துக் கொள்கிறுள். இரண்டு பிள்ளைகள் பெற்றும் கட்டுக் குலையாமலிருக்கும் தன் உடலைக் கண்டு ''பெரிய ஐயா'' முதல் சில்லறைக் கங்காணிமார் வரை 'ஒரு கண்'' போடுவதை நினைக்கும் போது ஒரு புறம் மகிழ்ச்சியாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருக்கின்றது.

கணவன் வெளியே சென்ற நான்கு நாட்களாக அவள் அவனுக்கு செய்யும் துரோகத்தை எண்ணும் போது வேதனை நெஞ்சை அரிக்கின்றது.

கடந்து போன நிகழ்ச்சிகளை நினைத்துக் கொள்கிறுள்......

அன்று சாக்குகாரப் பொடியனிடம் ஐயா சொல்லியனுப்பியிருந்ததை புரிந்து கொண்டவுடனேயே நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகலாம் போலிருந்தது அவளது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ள வந்தவன், தாயின் ஆபத்தான நிலையைக் காணப்போயிருக்கும் போது அவனுக்குத் துரோகம் செய்யலாமா?

'ஐயோ கூடாது! கூடவே கூடாது!! உயிரே போனுலும் இதற்கு சம்மதிக்கக் கூடாது என்ன நேர்ந்தாலும், எது வந்தாலும் இணங்க மாட்டேன்''!

'எவ்வளவு கீழ்த்தரமான வார்த்தைகள், எந்த ஒரு நல்ல பெண்ணுமே மனதால் கூட நினைக்க மறுக்கும் கீழ்த்தரமான எண்ணங்கள்''

மனதை திடப்படுத்திக் கொண்டு இணங்குவதேயில்லையென திடசங்கற்பம் செய்து கொண்டவளின் முன் பூதாகாரமாக பல பிரச்சினைகள் எழும்பிப் பயமுறுத்தலாயின.

பெரிய ஐயாவின் முகம் அவளின் மனக்கண் முன் தோன்றி மறைகின்றது. துரையிடம் அவருக்கிருக்கும் செல்வாக்கு, அதைப் பயன்படுத்தி அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாதவர்களைப் பழிவாங்கும் வழிகள் அவன் நினைவுக்கு வருகின்றது.

நான்கு மாதங்களுக்கு முன்பு பணிய டிவிசன் முத்தம்மா ஐயாவின் ''ஆசை''யைப் பூர்த்தி செய்ய மறுத்ததற்காக அவளது தகப்பனின் கங்காணி வேலைக்கு 'உலை' வைத்தது மட்டுமின்றி நாலைந்து ஆட்களை அமர்த்தி, இரண்டு உரம் மூடைகளை கங்காணியின் காய்கறி தோட்டத்தில் போட்டு, தோட்டத்து உரத்தை கங்காணி களவெடுத்தான் என்ற குற்றத்தைச் சுமத்தி. அவர்களது குடும்பமே கதறியழ கங்காணியை ''பொலிஸ் ஜீப்பில்'' ஏற்றி இறைக்கனுப்பி வைத்ததெல்லாம் அவன் மனதில் நிழலாடுகின்றன.

ஒரு குற்றமும் செய்யாத அந்த கங்காணியைத் தோட்டத்துக் காவல்காரன் அடித்த அடி...! ஒங்க வூட்டு அடி எங்க வூட்டு அடியா?''

லயத்துக்கு ஒரு தொழிற் சங்கம் இருக்கத்தான் செய்கிறது, இருந்து என்ன பலன்?

அவன் சிந்தித்துப் பார்த்தான். ஐயாவின் ஆசையை பூர்த்தி செய்ய மறுத்தால் முத்தம்மாவின் குடும்பத்துக்கு ஏற்பட்ட கதிதான் தனக்கும் பார்வதியின் கணவன் கள்வனாக்கப்பட்டு சிறைக் கம்பிகளுக்கு உள்ளே தள்ளப்படுவான். இது நிச்சயம்.

இப்படி ஒரு விபரீதத்தை அவளால் எண்ணிப் பார்க்கக் கூட முடியவில்லை. கணவனை சிறைக் கம்பிகளுக்குள் தள்ளி விட்டு இரண்டு பிள்ளைகளுடன் கண்ணீரும் கம்பலையுமாக திரிய அவள் மனம் இடம் கொடுக்கவில்லை, அவள் வாழ்வில் ஒரு பெரும் சோதனை பெண்மைக்கு அதன் கற்புக்குவிடும் சவால்.

கற்பு – அதைப்பேணி பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பெண்களுடையது மட்டுமல்ல, பெரும் பங்கு ஆண்களினதும் கூடத்தான்.

எண்ணக் குமிழிகளில் மூழ்கிப் போயிருந்த பார்வதியின் சிந்தனை அறுகின்றது. படுக்கையைவிட்டு மெள்ள வெளியே எழும்பி வந்து 'அவர்' வருகின்றாரா என்று பார்க்கின்றாள்,

'...அசோக வனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்ட சீதாப் பிராட்டியை இராவணனை மணந்து கொள்ளுமபடி அரக்கிகள் வற்புறுத்துகின்றனர். அந்த பாபமான வார்த்தைகளை காதில் கேட்ட ஜானகி காதுகளைப்பொத்திக் கொள்கிறாள்'' இராமாயணம் தொடர்கின்றது.

அமைதியாக சென்றுகொண்டிருந்த அவளது வாழ்க்கைப் படகை சூறாவளியாய் வந்து அமைதியை குலைத்து விட்ட 'ஐயா' வருகிறாரா என்று மீண்டும் இவளியே வந்து பார்க்கின்றாள். இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை அவளுடையது.

அவள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அந்த 'அவர்' இருளில் கள்வன் போல ஒளிந்து ஒளிந்து வருகிறார். பகலில் அரைக் காற்சட்டையணிந்து தொப்பி போட்டு. முழங்கால் வரை 'மேச் சோடு' போட்டு 'டக் டக்' என்று மிடுக்காக கைத்தடியை சுழற்றிக்கொண்டே அந்த பாதையில் மலைக்குப் போகும் அவர். இப்பொழுது கறுப்பு சட்டை, சாரத்துடனும்; தலையில் ஒரு முண்டாசுடனும், இரவில் கள்ளத்தனமாக ஆடு மாடுகளுக்கு ''இளேரியாக் குழை'' வெட்டப் போகிறவன் போல் பதுங்கி பதுங்கி போகிறார்,

பார்வதியின் மேல் 'ஒரு கண்' வைத்திருந்த ஐயா, அவள் புருசன் அயல் தோட்டத்துக்கு போய் இருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு இந்த நான்கு நாட்களாய் இதே நேரத்தில் அவள் வீட்டுக்கு நடையாய் நடக்கிறார்.

ஐயாவுக்கு நாற்பது வயதுக்கு மேல் இருக்கும் தோட்டத்தில் அவர் வைத்ததுதான் சட்டம். அவர் பேச்சுக்கு மறு பேச்சு கிடையாது. அவரது மனைவிக்கு ஒரு ''நோஞ்சான்'' உடம்பு மாந்துக்கும், மாயத்திற்கும் அலைந்து கொண்டிருக்கும் அம்மாவை அவர் சட்டை செய்வதில்லை.

பதுங்கி பதுங்கி வந்து கொண்டிருந்த ஐயாவுக்கு மேட்டு லயத்து இராமாயணம் காதில் விழுகின்றது. எ கே தன் உருவம் அவர்கள் கண்களில் பட்டுவிடுமோ என்ற பயத்தில்— கீழே படுத்து— ஊர்ந்து வருகின்றார்.

பகலில் ஐயாவின் கோலத்தைக் கண்டு ஆட்கள் நடுங்குகின்றார்கள். இப்பொழுது இந்த நேரத்தில்— இக்கோலத்தில் அவர்கள் கண்டு விடுவார்களோ என ஐயா தயங்குகின்றார்.


தட்டுக்கெட்டு தடுமாறி பணிய லயம் வந்து சேர்ந்தார் ஐயா ஒருக்கணித்து வைக்கப்பட்டிருந்த பார்வதியின் 'காம்பரா'' கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைகிறார். கதவு தாளிடப்பட விளக்கு அணைகிறது

''அசோக வனத்தில் இராவணனால் சிறை வைக்கப்பட்டிருந்த சீதை. இராமபிரானை நினைத்து கண்ணீர் வடிக்கின்றாள். அவளது கற்புக்கனல் இராவணனை அருகில் நெருங்க விடாமல் அனலாய் பொசுக்குகிறது.'' இராமாயண வாசிப்பு தொடர்ந்து நடைபெறுகின்றது

நேரம் நகர்கிறது. 'பட் பட்'டென்று கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு பார்வதி, ஐயா இருவரும் திடுக்கிடுகின்றனர். இந்த ''எமச்சாமத்தில்'' ஒரு நாளும் இல்லாத திருநாளாய் யார் வந்து கதவைத் தட்டுகிறார்கள் என்று அவள் யோசிக்கிறாள்

மீண்டும் கதவு தட்டப்படுகின்றது. அவளுக்கு உயிரே போய்விடும் போலிருக்கிறது. ஐயாவுக்கு

(8ம் பக்கம் பார்க்கவும்)



# குறிஞ்சி தென்னவன் கவிதைகள்

“மலைமுரசு” க. ப. சிவம்

மலையகத்தின் மூத்த கவிஞர்களில் ஒருவரான குறிஞ்சி தென்னவன் கவிதையில் மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வெளிவந்த ஒரு மாதத்தில் மீண்டும் இரண்டாம் பதிப்பு பல புதுக் கவிதைகளுடன் வெளிவந்துள்ளது.

இத்தகைய நிலைக்கு உயர்ந்துள்ள நமது பாட்டாளியும் கூட்டாளியும்தேட்டாளியுமான மலையகக்கவிஞர் குறிஞ்சி தென்னவனின் கவிதா திறமைகளை எவருமே மறைக்கவோ மறுக்கவோ இயலாது என்பது தெளிவாகி விட்டது.

“மனிதரிலே மிக்குயர்ந்த கவிஞர்” என்ற பாவேந்தர் பாரதிதாசன் கூற்றுக்கு ஏற்ப கவிஞர்கள் என்போர் மனித குலத்திலேயே அதி உன்னதமானவர்கள் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

இதே வேளையில் “காற்றிர்போம் பதருக காட்சியளிக்கின்றுர்கள் புலவர் சில்லோர்” இப்படியும் கவிதா மகுடத்தை தாமாகவே தலையிலே சூட்டிக் கொண்டு தம்மட்டமடிக் கின்றஇக்காலக்கட்டத்தில் நம் கவிஞர் குறிஞ்சி தென்னவன் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்கும், பெருமைக்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாக, அவரது சிந்தனை ஓட்டத்தின் மூலமாக தனது கவிதைகளை இன்றைய இலக்கிய உலகத்திற்கு வழங்கியுள்ளார்.

“நல்ல கவி இனிமை நம் தமிழர் நாடும் நாள் வெல்ல வரும் திருநாள்” என்ற பாரதிதாசனின் நனவைக் கனவாக்கும் நம் கவிஞர் குறிஞ்சி தென்னவனையும் அவரை ஈன்ற மலையகமும் அதன் மைந்தர்களும் இவரை ஏற்றிப் போற்றி தமிழுலகிற்கும் தரணிக்கும் அறிமுகம் செய்திட வேண்டியது தலையாய கடமைகளில் ஒன்ருகும்.

“அறிவெனும் வெளிச்சம் அங்கே இல்லை; மடமை மட்டும் மகிழ்ந்து கிடந்தது, என்ற மலையக மக்களின் நிலையை மாற்றிட வந்த நம் கவிஞர் குறிஞ்சி தென்னவனின் கவிதைகள் இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி மனப்பான்மை ஏற்படுத்தல் பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனும், பொது மக்கள் நலம்நாடி புதுக்கருத்தைச் சொல்ல புன் கருத்தை சொல்லுவதில் ஆயிரம் வந்தாலும் அதற்கொப்ப வேண்டாமே!” என்ற பாவேந்தர் லட்சியத்தை தனது கவிதைகள் அனைத்திலும் நிலை நிறுத்தி இருக்கின்ற குறிஞ்சி தென்னவன் “உணர்ச்சியை, எழுச்சியை ஊக்கத்தையும் எல்லாம் கரைத்துக் கரைத்துக் குடித்த கவிஞர்கள்” வரிசையிலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியவர்.

போதிமாதவனுக்கு தனது விண்ணப்பத்தை கவிதைகளால் காணிக்கையாக்கும் நம் கவிஞர் “அடியற்ற மரம் போல் ஆனதிங்கே, நன்நெறிதான்” என்று அஹிம்சையும் அறநெறியும் அடியோடு மாய்ந்து விட்டகாலக்கட்டத்தை இரண்டே வரிகளில் எத்தனை சிறப்பாக படைக்கின்றுர் என்பதை பார்க்கும் பொழுது, அவரது இதயக்குமுறலும், இதயத்தில் தோய்த்துஎடுத்த கவிதாஉணர்வும் வெள்ளிடை

நாளைய உலகத்தில் நாயகர்களாக திகழ வேண்டிய, இன்றைய பிஞ்சுக் குழந்தைகளுக்கு பிள்ளை பராமரிப்பாளர்களாக “ஆயம்மா”க்கள் எவ்வாறு இச்சிறுவர்களின் வாயில் கல்லையும் மண்ணையும் நிரப்பி, அவர்களது வருங்காலத்தை அப்படியே புதைத்து விடுகிருர்கள் என்பதை தனக்கே உரித்தான் அனுபவ முதிர்ச்சியினூடாக கவிதையாக வடித்து ‘குறும்பாவாக’ தருகிருர்.

ஆயம்மா வாகவரும் பெண்கள்!
அவர்களுக்கோ நாவிலிலே கண்கள்!
தாயம்மா மீனுச்சி —
சரசுவதி பிள்ளைகளின் —
வாயினிலே நிறைந்திருக்கும் மண்கள்

மலையகத்தவரை ஏனே தானேவாகவும், எடுப்பார் கைப்பாவையாகவும் ஈயம், பித்தளையாகவும் மதித்து அவமதித்த இந்நாட்டின் அதிகம் படித்தவர்கள் என்றெண்ணியவர்களுக்கெல்லாம் நாம் யார்க்கும் குறைந்தவர்கள் அல்ல என்பதை அனைத்துலகிற்கும் உணர்த்துகின்ற வகையிலும், உலகத்து நிதியை எல்லாம் நம் நாட்டில் குவிக்கின்ற மலையகத்து உழைப்பாளர் கரங்களில் வானுயர் சக்தியை பறைசாற்றும் வகையில் அந்த கரங்கள், எட்டுகோடி மைல்களுக்கு அப்பாள் இருக்கின்ற செவ்வாய் கிர

5ம் பக்கம் பார்க்கவும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...4ம் பக்கத் தொடர்ச்சி

கத்தில் கூட தேயிலை எனும் கற்பகத்தை நாட்டி பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுகின்ற பரந்த மனப்பான்மையும் நம் பாட்டாளி வர்க்கத்தின் பெரு மகிமையையும் உணர்த்துகின்ற கவிதை ஒன்று இதோ:-

கவ்வாத்து வெட்டிடும் கைகளிதுவென
அடிமைத்தளை யறுத்தே நகைக்காதீர்—வருங்
கேடுகள் நீக்கி உலகினிலே பெரும்
கீர்த்தி யடைந்திடுவார்

என்கிருர்.

மலையக வெளியீட்டகத்தின் குறிஞ்சி தென்னவனின் கவிதைகள் நமது தோட்டத்தில் பழுத்து தொங்குகின்ற மா, பலா, வாழை பழங்களாகும். இதன் சுவையினை அறிந்து, புரிந்து, தெரிந்து தெளிந்திட, இந்நூலுக்கு மட்டுமல்ல இதுபோன்ற மலையக சிந்தனைக் கருவூலங்களை வாங்கி படிப்பதன் மூலமே இன்றைய தலை முறைக்கும், நாளைய தலைமுறைக்கும் மலையக மக்களின் அருமையும் பெருமையும் உணர்த்தும் வழிவகைகளை சமைக்கும்.

## அடுத்த இதழில்

மலையக இலக்கியத் துறையில் தனது பணியை தொடங்கியுள்ள

திரு. சாரல் நாடன்

அவர்களைப் பற்றி அந்தனி ஜீவா அவர்கள் எழுதுகின்ருர்

## சிவராத்திரி விழா

மேற்படி விழா கடந்த 26-02-87 இல் இரத்தினபுரி கல்பொட தோட்டத்தில் தோட்ட மக்களின் ஒத்துழைப்புடன் மிக விமரிசையாக நடந்தேறியது. இவ்விழாவில் பிரதம அதிதியாக வண. பிதா ஜேக்கப் பர்ணண்டோ அடிகளார் (பணிப்பாளர், சேட்கொல) கலந்து கொண்டார். விழாவிற்கான முழு ஏற்பாடுகளையும் சமூக விருத்தி அமையத்தைச் சேர்ந்த திரு. ஏஸ் ஏ. லூக்காஸ் அவர்கள் மேற்கொண்டார்.

தகவல்; இயன் அல்பிரட்ஸ்
இறக்குவானை.

# "குன்றின் குரல்"

நடாத்தும்

# மலையக கவிதைப்போட்டி

முடிவு திகதி 25-4-1987

## பரிசு ரூபா 1000-00

குன்றின் குரல் நடத்தும் மலையக கவிதைப் போட்டி பலரின் வேண்டுகோளுக்கிணங்க திகதி நீடிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் 10ம் திகதிக்கு முன்னர் உங்கள் கவிதைகளை அனுப்பி வைக்க வேண்டுகிருேம்.

குன்றின் நடத்தும் கவிதைப் போட்டியில் எவரும் பங்குபற்றலாம்; மலையகமே நிலைக்களனுகவும், கருப்பொருளாகவும் அமைய வேண்டும். மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற தலைப்புகளில் போட்டி நடத்தப்படுகின்றது. ஒருவர் இரண்டு போட்டிகளிலும் பங்கு பற்றலாம். ஆனல் படைப்புகளை வெவ்வேருக அனுப்பி வைக்க வேண்டும். கடித உறைகளில் மரபுக்கவிதை, புதுக்கவிதை என்று குறிப்பிட வேண்டும்!

கவிதைப் போட்டிக்கு படைப்புகளை அனுப்புவோர் அவசியம் பின்பற்ற வேண்டியது. கவிதைகளில் தங்கள் பெயர்களை குறிப்பிடக் கூடாது. வேறு ஒரு தாளில் கவிதையின் தலைப்பு, எழுதியவரின் பெயர், புனைப்பெயராக இருப்பின் சொந்தப்பெயர், முகவரி ஆகியவற்றை குறிப்பிட வேண்டும்,

போட்டிகளில் பங்குபற்றுவோர் எத்தனை படைப்புகள் வேண்டுமாளுலும் அனுப்பலாம். தனித்தனி கடித உறைகளில் அவைகள் அனுப்பப் பட வேண்டும்-

முதல் பரிசு ரூ; 200/. இரண்டாம் பரிசு ரூ 150/, மூன்றும் பரிசு ரூ. 100/, ஆறுதல் பரிசு 50. இரண்டு போட்டிகளுக்கும் வெவ்வேருக பரிசு வழங்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

"கவிதைப் போட்டி"
குன்றின் குரல்
30. புஸ்பதான மாவத்த.
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோ. நடேச ஐயர் பேசுகிறார்!

# சகோதரர்களுக்கு ஒரு வார்த்தை

மலையகத்தின் தொழிற்சங்க முதல்வர் அமரர் கோ. நடேச ஐயர் 50 வருடங்களுக்கு முன் அவர் வெளியிட்ட ''தொழிலாளர் சட்ட புஸ்தகம்'' என்ற நூலில் அவர் கூறியிருப்பதை கீழே தந்துள்ளோம்.

இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்யத் தொழிலாளர்களாக உங்களை அழைத்து வரத் தலைப்பட்டு 100 வருஷ காலமாகிறது. ஆரம்ப காலத்தில் பாய்க் கப்பலில் வந்து நூறு நூற்றைம்பது மைல் காடு வழியாக பட்டினியாலும் பசியாலும் வாடி உலர்ந்து வந்து புலிகள் வாழ்ந்த காடுகளை வெட்டித் திருத்தி தோட்டங்களாக்கினீர்கள். அக்காலங்களில் கடன் பட்டும், அடிப்பட்டும், உதைப்பட்டும் ஜெயிலில் அடைப்பட்டும் அந்நியர்களுக்கு உழைத்துக் கொடுத்தீர்கள். தோட்டக்காரர்கள் லட்சாதிகாரி ஆனார்கள். இங்கிலாந்து செழிப்படைந்து, காடாயிருந்த இலங்கை சிங்கார நாடாயிற்று பிரிட்டிஷ்காரர்களுக்கு செல்வம் கொடுக்கும் நாடாக இலங்கை ஆயிற்று. ஆயிரக்கணக்கான கார்கள் வரலாயிற்று. இந்நாடே செழித்தது, உங்கள் நிலைமை தான் என்ன? அன்றைக்கும் அடிமை, இன்றைக்கும் அடிமை. தேயிலைத் தூரில் தேங்காய் காய்க்கிறது. மாசி உண்டாகிற, தங்கக்காசு சம்பளம் என்று அழைத்து வரப்பட்ட உங்கள் மூன்னோர்கள் தேயிலைத் தூர்களுக்கும் ரப்பர் மரங்களுக்கும் எருவானதைத்தவிர உங்களுக்கு சொத்து சேர்த்து வைத்திருக்கிறார்களா? கூலிக்காரன் என்ற பெயர் போய்விட்டதா? சிங்களவர்கள் கிராமவாசிகள் விவசாயிகள், இந்தியர்கள் கூலிகள்தான் என்ற கேவலமான பெயர் போயிற்றா? மானமிழந்த பின் வாழாமை முன்னினிதே என்பது பழைய பழமொழி, உங்கள் மானத்தைக் காப்பாற்றி கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது, உங்கள் மானத்தை நீங்களே காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அந்நியர்கள் வந்து காப்பாற்றுவார்கள் என்று எண்ண வேண்டாம்,

இலங்கைத் தோட்டங்கள் பல கம்பெனிக்குச் சொந்தம், கம்பெனிகளின் முதல் பல பங்குகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கம்பெனிக்கும் பல்லாயிரம் பங்குகள் உண்டு. இந்தியாவிலுள்ள கவர்னர்கள், வைஸ்ராய்கள் வேறு பெரிய உத்தியோகஸ்தர்கள் இங்கிலாந்திலுள்ள காமன்ஸ் சபை அங்கத்தவர்கள். மந்திரிகள் மற்றும் அநேக செல்வாக்குள்ள பிரமுகர்கள் நீங்கள் வேலை செய்யும் தோட்டங்களின் பங்காளிகள், உங்கள் உழைப்பினால் ஏற்படும் லாபத்தைக் கொண்டு அவர்கள் சாப்பிட்டு சுகித்து உலகத்தை ஆளுகிறார்கள், உங்களால் அவர்கள் ராஜபோகம் அனுபவிக்கையில் அவர்களுக்கு ராஜபோகம் கொடுக்கும் நீங்கள் உங்களுக்கு வேண்டிய மனித சுதந்திரத்தையாவது பெற முயற்சிக்க வேண்டாமா? உங்களுக்கு ராஜபோகம் வேண்டாம், மோட்டார்கள் வேண்டாம், மாடமாளிகைகள் வேண்டாம், உல்லாச வாழ்க்கை வேண்டாம், நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்தும் உங்களுக்கு இரண்டு வேளை வயிறு நிறைய சோறாவது கிடைக்க வேண்டாமா? அதற்காகப் பாடுபடுவது குற்றமா? நீங்கள் வேண்டுவது மனிதருக்குள்ள உரிமைதான், மிருகங்களைப் போல் நடத்தப்பெறாமல் மனிதர்களைப் போல் தலை நிமிர்ந்து நடக்க உங்களுக்கு உரிமை வேண்டும். அந்த உரிமையில்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? நீங்கள் இன்றே யோசியுங்கள் இக்கட்டுரையில் சொல்லப்பட்ட எல்லாவற்றையும் கவனித்து வாசியுங்கள். வாசிக்கத் தெரிந்தவர்கள் வாசிக்கத் தெரியாதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். எல்லோரும் ஒன்று கூடுங்கள், ஒற்றுமைப்படுங்கள். சங்கங் கூட்டுங்கள், அவ்விதம் நீங்கள் ஒற்றுமைப்பட்டு விட்டதாகக் கண்டாலும், கேட்டாலும் எல்லோரும் சந்தோசப் படுவார்கள். பாரதமாதா சந்தோஷப்படுவாள். சுதந்திர வீரர்கள் கூத்தாடுவார்கள், உங்களை அடிமைகளாக வைத்து உங்களது ரத்தத்தை உறிஞ்சும் இனத்தவர்களுக்கு வருந்தத்தான் அவர்கள் ஒரு சிறுபான்மையோர், அவர்களைப்பற்றி உங்களுக்கு கவலை வேண்டாம். ஆறரை லட்சம் பெயர்களை கவனிப்பதா? அல்லது நாலு ஐந்து ஆயிரம் பேர்களைக் கவனிப்தா? இன்றே கூடுங்கள், சுதந்திரம் தேடுங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...1ம் பக்கத் தொடர்ச்சி

தென்னிந்திய பிராமணரான கோ. நடேசஐயர் தோட்டம் தோட்டமாக தன் மனைவியுடன் சென்றார். மகாகவி பாரதியாரின் பாடல்களை கோ, நடேச ஐயரின் மனைவியார் பாடுவார், பின்னர் ஐயர் தொழிலாளர்களின் உண்மை நிலையை உணர்ச்சியை தூண்டும் விதத்தில் உரையாற்றுவார்.

மலையக தோட்டத் தொழிலாளர்களுக்காக 1938ம் ஆண்டு தொழிற் சங்கமொன்றை அமைத்தார். அதில் தொழிலாளர்களை சேர வருமாறு அறை கூவி அழைத்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்காக, அவர்களுக்கு குரல் எழுப்ப. கோ.நடேச ஐயர் தொழிற் சங்க அமைப்பை நிறுவியது கண்டு தோட்டத்து ரைமார்களும். கங்காணிகளும். தோட்டத் தொழிலாளர்களை தொழிற் சங்கத்தில் சேர விடாது பயமுறுத்தினர்கள்.

தொழிலாளர்களுக்காக குரல் எழுப்பிய கோ. நடேச ஐயரை தோட்டங்களுக்கு நுழைய விடாது தடுத்தார்கள். அட்டனில் அவர் கட்டிய வீட்டை விட்டு விரட்டினர்கள். அவரை சுட்டு தள்ளவும் சூழ்ச்சி செய்தார்கள்

இதை எல்லாம் கண்டு நடேச ஐயர் பயப்படாமல் 'தோட்டத் தொழிலாளியே பயப்படாதே! இந்தா இந்த நோட்டீஸை படி, உன் தொழிற் சங்கத்தில் சேர உனக்கு உரிமையுண்டு. அதை தடுக்க எவனுக்கும் உரிமை கிடையாது. தைரியமாக சேர், கள்ளக்கணக்கெழுத இடந் தராதே. கங்காணிகளது அட்டகாசத்தை மட்டந்தட்டு, குட்டிச்சாக்கில் சம்பளத்தை எடுக்கும் மட்டித் தனத்தை எட்டி உதை. அரைப் பெயர் போடுவதை எதிர்த்து நில் பகற் சாப்பாட்டுக்கு ஒரு மணி நேரம் லீவு உண்டு பயமின்றி கேள். உன்னை மிரட்டும் வீணனுக்கு பயந்து உரிமையை விட்டுக்கொடாதே'' என்றெல்லாம் தொழிலாளர்களுக்காக உரிமை முழக்கம் செய்தார்.

அது மட்டுமா? தொழிலாளருக்காக பத்திரிகை நடத்தினர். 'தேசபக்தன்'' என்ற பத்திரிகையின் மூலம் பல உண்மைகளை அம்பலப்படுத்தினர்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று அனுபவிக்கும் தொழிற்சங்க உரிமைகளுக்கு வித்திட்ட பெருமை கோ; நடேச ஐயரையேச் சாரும்:

''கூடை தலை மேலே, குடி வாழ்க்கை நடு ரோட்டிலே'' எனத் தவித்த தொழிலாளர்களுக்கு வழி காட்டும் ஒளி விளக்காக. கலங்கரை விளக்காக திகழ்ந்த கோ. நடேச ஐயரை தொழிற்சங்கங்களும் தொழிலாளர்களும் மறந்து விட்டனர்,

இன்று மலையகத்தில் வாழும் இளைய தலைமுறையினர் கோ. நடேச ஐயர் அவர்களைப் பற்றி எதுவும் தெரியாது. அதனுல் தொழிலாளர்களின் உரிமை தினமான மே தினத்தன்று தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் அவரை நினைவு கூற வேண்டும்.

—மலையக மக்களின் ஒளிவிளக்கான கோ. நடேச ஐயரை ஆண்டு தோறும் நினைவு கூறுவோம்.

# தோட்டத்து துயில் பொழுது!

— சு. முரளிதரன் —

மூலை லயத்து ஒத்தைக் கடை
'பெட்ரோ மெக்ஸி'ல்
திறந்து விடப்பட்ட
காற்று - உஸ்ஸென
இருள் திரையெங்கும்
கறுப்பைத் தூவும்!

சுருட்டு சுவைத்தபடி
மலையாண்டிக் கிழவன்
முதுகு சொறியும்
'பரக்' 'பரக்' சப்தமும்
அழகம்மாக் கிழவியின்
'டொக்' 'டொக்' எனும்
வெற்றிலை உரல் சப்தமும்
அந்தகாரத்தின் மௌனத்தை
ஆழமாக்கும்]

'கிளப்' சென்று மீளும்
பெரியத்துரை காரின்
'ஹோர்ன்' சப்தம்
பயங்கர இரவினை
குரூரமாய் சலனப்படுத்தும்!

இராத்திரி தேயிலை
அரைக்க உர்ரென......
தொடங்கி தொடரும்
ஸ்டோர் இயந்திரத்தின்
தாலாட்டில் — 'இந்த'
இயந்த சவங்கள்
விடியு மட்டும்
தற்காலிக மாய்
இறந்து போகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "குன்றின் குரல்" ஆதரவாளர்களுக்கு...

# திறந்த மடல்!

அன்புள்ளங் கொண்ட, "குன்றின் குரல்" எழுத்தாளர்களே, வாசகர்களே, ஆதரவாளர்களே, குன்றின் குரல்' சஞ்சிகைப்பற்றி உங்களுடன் மனந் திறந்து இந்த திறந்த மடல் மூலம் பேச விரும்புகின்றேன்.

தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்திலிருந்து கடந்த ஏழு ஆண்டுகளாக 'குன்றின் குரல்' சஞ்சிகை வெளிவருவது நீங்கள் அறிந்த விடயமே, கடந்த ஒராண்டுகளுக்கு மேலாக 'குன்றின் குரல்' சஞ்சிகையுடன் எனது பணியையும் இணைத்துக்கொண்டு செயல்பட்டு வருகிறேன்,

'குன்றின் குரல்! இணை ஆசிரியர்களில் ஒருவருராக செயல்படத் தொடங்கியதும் 'குன்றின் குரல் உள்ளடக்கத்தில் எனது முழு கவனத்தையும் செலுத்தினேன். இணையாசிரியரும் வயதில் என்னைவிட மூத்தவருமான திரு, அ. கி, இமானுவேல் எனக்கு சகல ஒத்துழைப்பும் வழங்கியதுடன், சுதந்திரமாக செயல்பட துணை நின்றார்,

'குன்றின் குரல்' சஞ்சிகை மலையகத்தின் தலைநகரான கண்டியிலிருந்து வெளிவருவதால் அது மலையக மக்களுக்கும் இளைய தலைமுறையினருக்கும் பயன்படும் சஞ்சிகையாக வெளிவர வேண்டுமென்ற அவாவில் மலையக எழுத்தாளர்களின் முகவரிகளை மலையக கலை இலக்கியப் பேரவை செயலாளர் திரு. அந்தனி ஜீவாவிடமிருந்து பெற்றுக்கொண்டு நூற்றுக்கு அதிகமான மலையகத்தை சேர்ந்த பழைய, புதிய எழுத்தாளர்களுக்கு, 'குன்றின் குரல்' அவர்களின் கரங்களுக்கு எட்டச் செய்தேன். ஒரு சிலர் குன்றின் குரல்' சிறப்பாக வெளிவர வேண்டும் என வரழ்த்தினர். ஆனால் பழையவர்களான ஓரிருவரைத் தவிர வேறு எவருமே எந்த ஆக்கங்களையும் அனுப்பவில்லை. புதியவர்சள் பலர் விடயங்கள் அனுப்புவதில் ஆர்வம் காட்டினார்கள்.

'குன்றின் குரல்' சஞ்சிகை சாத்திரமான ஆக்கங்களை தாங்கி வெளிவந்தது. பலரும் 'குன்றின் குரல்' கேட்டு எழுதினார்கள். மலையகம் பற்றி தேடுதல் முயற்சி நடத்தும் ஆய்வாளர்களும், பல்கலை மாணவர்களும் 'குன்றின் குரல்' பழைய பிரதிகளை தேடி வருகிறார்கள்.

உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி 'குன்றின் குரல்' தொடர்ந்து காத்திரமான விடயங்களுடன் படித்து பாதுகாக்க வேண்டிய சஞ்சிகையாக வெளிவரும். மே மாதம் முதல் 12 பக்கங்களில் மலரும் என்டதை முன்கூட்டியே தெரிவித்துக்கொள்கிறோம். 'குன்றின் குரல்;' பற்றிய உங்கள் எண்ணங்களை "குன்றின் குரல்.' இல 30, புஸ்பதான மாவத்தை, கண்டி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்

— ஜே. ஜேஸ்கொடி

---

2ம் பக்கத் தொடர்ச்சி .

### பார்வதி

வயிற்றில் புளி போட்டு கரைகின்றது. கதவு மூலையில் ஒளிந்து கொண்டு நிற்கவும் வசதியில்லையெனக் கண்ட ஐயாவின் உடல் நடுங்குகின்றது

தாய் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கின்றாள் என அவளைப் பார்க்கப் போன தன் கணவன். அவனது தாய் இறந்து விட்ட செய்தியைச் சொல்லி தன்னையும் அழைத்துக்கொண்டு போக இந்த சிவ பூசையில் கரடியாய் வருவான் என்று அவள் எதிர் பார்த்தாளா? இல்லை ஐயர தான் எதிர்பார்த்தாரா?

யார் கதவைத் தட்டினார்கள்? என்ன இழவோ என்ற பயத்தில் கதவைத் திறக்கிறாள் பார்வதி.

தாய் செத்த துயரத்தோடு வந்தவன், இந்நள்ளிரவில் தன் வீட்டில் மனைவியும் ஐயாவும் நின்ற கோலத்தை அதிர்ச்சியுடன் பார்க்கின்றான்.

நேரங்கெட்ட நேரத்தில் கணவனைக் கண்ட பார்வதி சிலையாக நிற்கின்றாள்

வந்த வழியே திரும்பி போய்விடுவதா? இல்லை— கவ்வாத்துக் கத்தியை தூக்குவது; காரசாரமாக சண்டை போட்டு கூட்டத்தைக் கூட்டுவது போன்ற எண்ணங்கள் பார்வதியின் கணவன் மனதில் எழுகின்றது

மறுகணம்—

"இராவணனை அழித்தப் பின்னர் எத்தனை துன்பங்கள் வந்தாலும அதற்கெல்லாம் பணிந்துவிடாது, தனது கற்பைக் காப்பாற்றிய சீதையைத் தன்னுடன் அழைத்துகொண்டு மிதிலைக்குப் புறப்படுகின்றார் இராமர் "

அத்துடன் அன்றைய இராமாயணம் வாசிப்பை முடிக்கிறார் மேட்டு லயத்து அண்ணாவிக் கங்காணி.

—*—

---

"குன்றின் குரல்" தோட்டப் பிரதேசங்கட்கான கூட்டுச் செயலகத்தின் சஞ்சிகை. அச்சிட்டு வெளியிடுபவர் வண. போல் செஸ்பர்ஸ் அடிகள், முகவரி 30, புஸ்பதான மாவத்த, கண்டி. அச்சகம்: சென்றல் பிரிண்டர், 98 v, திருகோணமலை வீதி, கண்டி. இணை ஆசிரியர்கள்: அ கி. இம்மானுவேல் ஜே. ஜேஸ்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org